# திருச்செங்கோடு விவேகானந்தா மகளிர் கல்லூரியில்

## கணிதவியல் துறை சார்பாக பயிற்சி பயிலரங்கம்

திருச்செங்கோடு விவேகானந்தா மகளிர் கல்லூரியின் கணிதவியல் துறையின் சார்பில் தேசிய அளவிலான லெடெக்ஸ் பயிற்சி பயிலரங்கம் விவேகானந்தா மகளிர் கல்வி நிறுவனங்களின் நிறுவனர் தாளாளர் மற்றும் செயலர் டாக்டர். மு. கருணாநிதி அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. துணைத் தாளாளர் டாக்டர் கிருபாநிதி, விவேகானந்தா மகளிர் கல்வி நிறுவனங்கள் மற்றும் மருத்துவமனையின் மேலாண்மை இயக்குநர் உயர்திரு. திருமதி. கிருஷ்ணவேணி கருணாநிதி அவர்கள் குத்து விள்க்கு ஏற்றி இப்பயிலரங்கை துவக்கி வைத்தார், துணை மேலாண்மை இயக்குநர் டாக்டர் அர்த்தநாரீஸ்வரன் அவர்கள், இணைச் செயலாளர் டாக்டர் ஸ்ரீராகநிதி அர்த்தநாரீஸ்வரன் அவர்கள், நிர்வாக இயக்குநர் டாக்டர் நிவேதனா கிருபாநிதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும், தற்போது விவேகானந்தா கல்வி நிறுவனங்களின் ஆலோசகர் டாக்டர் விஸ்வநாதன், தலைமை நிர்வாகி சொக்கலிங்கம், அட்மிஷன் இயக்குநர் வரதராஜு, விவேகானந்தா மகளிர் கல்லூரி முதல்வர் முனைவர் இராஜேந்திரன், புலமுதன்மையர் முனைவர் பத்மநாபன், கணிதவியல் துறையின் தலைவர் முனைவர் ரவி ஆகியோர் கலந்து கொண்டனர். சிறப்பு விருந்தினராக திருச்சி ஆர்.வி.எஸ். கலைக் கல்லூரி முதல்வர் முனைவர் ரூபன்ராஜ் கலந்துகொண்டார்.

சிறப்பு விருந்தினர் முதல்வர் டாக்டர் ரூபன்ராஜ் தனது உரையில், " வருங்காலத்தில் மாணவிகளுக்கு லெடெக்ஸ் முதன்மையாக விளங்கும். மைக்ரோ சாஃப்ட்வேர் மென்பொருளைக் காட்டிலும் லெடெக்ஸ் முக்கியமானதாக மாணவிகளுக்கு உதவும் வகையில் உள்ளது. மாணவிகள் அதை பயன்படுத்துவதும் எளிதாக உள்ளது " என்று கூறினார்.

இந்த பயிற்சி பயிலரங்கத்திற்கு பெரியார் பல்கலைக்கழக இணைக் கல்லூரிகளில் இருந்து சுமார் 250க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

